

வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மேல் பாடியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3000 மற்றும் கரும்பு, சர்க்கரை, பச்சரிசி ஆகியவற்றை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார் ,ஊராட்சி குழு தலைவர் வேல்முருகன், வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, ஒன்றியச் செயலாளர் கே. கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுமக்களுக்கு பச்சரிசி, சர்க்கரை, முழுக் கரும்பு, வேட்டி–சேலை மற்றும் ரூ.3000 ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், தச்சம்பட்டு ஊராட்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு. பெ.கிரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், கூட்டுறத்துறை இணைப் பதிவாளர் ஆகியோர் இருந்தனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.3000 ரொக்கம்!

## குடும்ப அட்டைதாரர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன.9–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டநியாயவிலைக் கடைகளில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் 3,000 ரூபாய் ரொக்கம் ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் வேட்டி, சேலைகளை வழங்கினார்.**

உலகில் பல திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வந்தாலும், விவசாயத்திற்கு உயிர்நாடியாக விளங்கும் சூரியனுக்கு அறுவடைக் காலத்தில் நன்றி தெரிவிக்கும் இயற்கையை கொண்டாடுகின்ற விழாவாக பொங்கல் திருவிழா தமிழர்களால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பாக கொண்டாப்பட்டு வருகின்றது.

பொங்கல் திருவிழாவானது விவசாயம் செழிக்க காரணமான சூரியனுக்கு மட்டுமல்லாது விவசாயம் செய்ய தங்களோடு உழைத்த மாடுகளுக்கும் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை பொதுமக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட 3,000 ரூபாய் வழங்கப்படும்" எனவும் அறிவித்து நேற்று பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, சிந்தாதரிப்பேட்டை உலகப்பா மேஸ்திரி தெருவில் செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் 3,000 ரூபாய் ரொக்கம் ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

மேலும், சிந்தாதரிப்பேட்டை அருணாசலம் தெருவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் நியாய விலைக் கடை மற்றும் ராயப்பேட்டையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் ராயப்பேட்டை 5 நியாய விலைக் கடை ஆகியவற்றில் குடும்ப அட்டை தாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.3000/ம் ரொக்கம் ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் வேட்டி, சேலைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் திருமதி கி.கவிதா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் திருமதி கோ.லட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் குடும்ப அட்டைதாரர்கள் கலந்து கொண்டனர்.

### கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம், திரு.வி.க.நகர் தொகுதிகளில்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.3000 ரொக்கம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

*சென்னை, ஜன.9-*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.01.2026) தமிழ்நாடு முழுவதும் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கியிடும் பணியினைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக, சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000/- ரொக்கம் மற்றும் வேட்டி, சேலைகளை வழங்கி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் கிளைவ் பேட்டரி, மிராலி தெரு, நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/-ம் ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்.

பின்னர், எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் டிமல்லஸ் சாலையில் உள்ள அமுதம் நியாய விலைக் கடை, வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் வார்டு-94, சிட்கோ நகர், சிந்தாமணி நியாய விலைக் கடை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வார்டு-70, அயனாவரம் மயிலப்பன் தெருவில், உள்ள நியாய விலைக் கடை, வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் வார்டு-74, பெரம்பூர் சந்திர யோகி சமாதி சாலையில் உள்ள சிந்தாமணி நியாய விலைக் கடை ஆகிய நியாய விலைக் கடைகளில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000/-ம் ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்.

பின்னர், நியாய விலைக் கடைகளில் கூட்ட நெரிசலைத் தவிர்த்திடும் வகையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு விநியோகிக்கப்பட்ட டோக்கன் வரிசையின்படி நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பொங்கல் பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாடிடுமாறு குடும்ப அட்டைதாரர்களுக்கு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் மேயர் திருமதி ஆர்.பிரியா, வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), மண்டலக் குழுத் தலைவர்கள் பி. ஸ்ரீராமுலு (இராயபுரம்), கூ.பி.ஜெயின், (அண்ணாநகர்), திருமதி சரிதா மகேஷ் குமார் (வி.க.நகர்), நியமனக்குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் இசட் ஆசாத், திருமதி சுமதி, திருமதி சுதா மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் ஜனவரி 11 மற்றும் 12 அயலகத் தமிழர் தினம் 2026 சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆயத்த பணிகளின் முன்னேற்றம் குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் வள்ளாளர் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்கள் சிங்கப்பூர் ராம் , பைசல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில், பொங்கல் தொகுப்பு ரூபாய் 3000 வழங்கும் திட்டத்தை இ. கருணாநிதி எம்.எல்.ஏ பல்லாவரம் பகுதியில் உள்ள நியாய விலை கடைகளில் தொடங்கி வைத்தார். மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர் டி.வி.ராஜா, பகுதி துணைச் செயலாளர் வ. முத்து, மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### 101 (அ) வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

# குல்லு (எ) விக்னேஷின் பாட்டி பா.வடிவம்மாள் மறைவு!

**எம்.கே.மோகன் – ச.பரமசிவம் – கார்த்திக் மோகன் – மெட்டில்டா கோவிந்தராஜ் – சி.பி.திருமலை – க.கோவிந்தராஜ் அஞ்சலி!**

*சென்னை, ஜன. 09 -*

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்குப் பகுதி, 101 வது (அ) வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குல்லு (எ) விக்னேஷ் அவர்களின் பாட்டி பா. வடிவம்மாள் (வயது 76) அவர்கள் நேற்று (08.01.2026 - வியாழக்கிழமை) அதிகாலை 3 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழிட்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், அண்ணா நகர் வடக்கு பகுதி துணைச் செயலாளர் கே.பி.சுரேந்தர் மற்றும் கழக நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (09.01.2026 - வெள்ளிக்கிழமை) பகல் 12 மணியளவில், அன்னாரின் இல்லம், எண். 6/11, மஞ்சகொல்லை தெரு, அமைந்தகரையில் இருந்து புறப்பட்டு கீழ்ப்பாக்கம் சின்ன கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.


## 49வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்”

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

**49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**